## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 5-10 - பிறந்தவாறும்
## (ஆழ்வார் தாம் பகவத் குணாநுபவத்தால் உருகும் தன்மை தவிர்ந்து, சேர்ந்து அநுபவிக்கச் செய்யும்படி எம்பெருமானை வேண்டுதல்)

3216 * பிறந்தவாறும் வளர்ந்தவாறும் *
பெரிய பாரதம் கை செய்து * ஐவர்க்குத்
திறங்கள் காட்டியிட்டுச் *
செய்து போன மாயங்களும் **
நிறந்தனூடு புக்கு எனதாவியை *
நின்று நின்று உருக்கி உண்கின்ற * இச்
சிறந்த வான்சுடரே! *
உன்னை என்று கொல் சேர்வதுவே? 1

3217 வதுவை வார்த்தையுள் ஏறு பாய்ந்ததும் *
மாய மாவினை வாய் பிளந்ததும் *
மதுவைவார் குழலார் *
குரவை பிணைந்த குழகும் **
அதுவிதுவுது என்னலாவன வல்ல *
என்னை உன் செய்கை நைவிக்கும் *
முதுவைய முதல்வா! *
உன்னை என்று தலைப்பெய்வனே? 2

3218 பெய்யும் பூங்குழல் பேய்முலை உண்ட *
பிள்ளைத் தேற்றமும் * பேர்ந்தோர் சாடிறச்
செய்ய பாதம் ஒன்றால் *
செய்த நின் சிறுச் சேவகமும் **
நெய்யுண் வார்த்தையுள் அன்னை கோல் கொள்ள *
நீ உன் தாமரைக் கண்கள் நீர் மல்க *
பையவே நிலையும் வந்து *
என் நெஞ்சை உருக்குங்களே 3

3219 கள்ள வேடத்தைக் கொண்டு போய்ப் * புறம்
புக்கவாறும் கலந்து * அசுரரை
உள்ளம் பேதம் செய்திட்டு *
உயிருண்ட உபாயங்களும் **
வெள்ள நீர்ச் சடையானும் * நின்னிடை வேறலாமை
விளங்க நின்றதும் *
உள்ளம் உள் குடைந்து * என்
உயிரை உருக்கி உண்ணுமே 4

3220 உண்ண வானவர் கோனுக்கு * ஆயர்

ஒருப்படுத்த அடிசில் உண்டதும் *
வண்ண மால்வரையை
எடுத்து * மழை காத்ததும் **
மண்ணை முன் படைத்து * உண்டுமிழ்ந்து கடந்திடந்து
மணந்த மாயங்கள் *
எண்ணும் தோறும் என்னெஞ்சு * எரிவாய்
மெழுகொக்கும் நின்றே 5

3221 நின்றவாறும் இருந்தவாறும் *
கிடந்தவாறும் நினைப்பரியன *
ஒன்றலா உருவாய் * அருவாய
நின் மாயங்கள் **
நின்று நின்று நினைகின்றேன் * உன்னை
எங்ஙனம் நினைகிற்பன்? * பாவியேற்கு
ஒன்று நன்குரையாய் *
உலகம் உண்ட ஒண்சுடரே! 6

3222 ஒண்சுடரோடு இருளுமாய் நின்றவாறும் *
உண்மையோடு இன்மையாய் வந்து * என்
கண்கொளா வகை நீ * கரந்து
என்னைச் செய்கின்றன **
எண்கொள் சிந்தையுள் நைகின்றேன் * என் கரிய
மாணிக்கமே! * என் கண்கட்குத்
திண்கொள்ள ஒரு நாள் * அருளாய்
உன் திருவுருவே 7

3223 திருவுருவு கிடந்தவாறும் * கொப்பூழ்ச்
செந்தாமரை மேல் * திசைமுகன்
கருவுள் வீற்றிருந்து *
படைத்திட்ட கருமங்களும் **
பொருவில் உன் தனி நாயகமவை கேட்கும்
தோறும் * என் நெஞ்சம் நின்று நெக்கு *
அருவி சோரும் கண்ணீர் *
என் செய்கேன் அடியேனே? 8

3224 அடியை மூன்றை இரந்தவாறும் * அங்கே நின்று
ஆழ்கடலும் மண்ணும் விண்ணும்
முடிய * ஈரடியால் * முடித்துக்
கொண்ட முக்கியமும் **
நொடியுமாறவை கேட்கும் தோறும் * என்
நெஞ்சம் நின்தனக்கே கரைந்துகும் *
கொடிய வல்வினையேன் *
உன்னை என்று கொல் கூடுவதே? 9

3225 கூடி நீரைக் கடைந்தவாறும் *
அமுதம் தேவர் உண்ண * அசுரரை
வீடும் வண்ணங்களே *
செய்து போன வித்தகமும் **
ஊடு புக்கு எனதாவியை * உருக்கி
உண்டிடுகின்ற * நின்தன்னை
நாடும் வண்ணம் சொல்லாய் *
நச்சு நாகணையானே! 10

3226 * நாகணை மிசை நம்பிரான் * சரணே
சரண் நமக்கென்று * நாள்தொறும்
ஏக சிந்தையனாய்க் *
குருகூர்ச் சடகோபன் மாறன் **
ஆக நூற்ற அந்தாதி * ஆயிரத்துள்
இவையும் ஓர் பத்தும் வல்லார் *
மாக வைகுந்தத்து *
மகிழ்வெய்துவர் வைகலுமே 11

**அடிவரவு:** பிறந்த வது பெய்யும் கள்ள உண்ண நின்ற ஒண்சுடர்
திருவுரு கூடி நாகணை வைகல்